**12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, ஞாலகுரு**
**சித்தர் அரசயோகிக் கருவூறார் அவர்கள் அருளியது**

# சித்தர் நெறி விளக்கம்



**இந்து மதத் தந்தை, இந்து வேத நாயகம்,**
**12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, மடாதிபதி, ஞானச்சாரியார்,**
**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார்.**
**(சென்னை செங்குன்றத்தை அடுத்த காரனோடையில் கோயில் கொண்டருளுபவர்)**

**மெய்யான இந்துமத ஆண்டு 43,73,119 மார்கழி மாதம்.**

## இந்து இலக்கியக் கழகம்

காணிக்கை: ரூ 10/-

**ஓம் குருவே போற்றி! ஓம் குரு குரு வாழ்க! ஓம் குருவே எல்லாம்!**

# உள்ளுறை

**1. "குருவாணை ஒலைநாயகம் வரையும் மடல்" - 1984இல் சித்தர் நெறி பற்றியும், குருதேவர் அவர்கள் பற்றியும் அனைவருக்கும் வழங்கிய அறிமுகக் கட்டுரை.**

**2. "ஞானம் வழங்கு பருவபூசை" - 07/04/1984இல் குருதேவர் அவர்கள் அனைவருக்கும் இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் தத்துவ அடிப்படைகளையும், செயல் சித்தாந்தங்களையும் வழங்கிய விரிவான கட்டுரை.**

**3. "அருட்பணி விரிவாக்கத் திட்ட உறுதிமொழி" - 1984இல் குருதேவர் அவர்கள் வெளியிட்ட அச்சிட்ட அறிவிக்கை.**

---

**..... 'உலகமெல்லாம் உள்ள அனைத்து மொழிகளிலும் வழிபாடு, பூசை, தவம், வேள்வி, .... முதலிய அனைத்தும் செய்து பத்தி, சத்தி, சித்தி, முத்தி பெறலாம்' - என்ற விஞ்ஞானச் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயத் தத்துவத்தை மெய்ஞ்ஞானமாக வழங்குகிறது சித்தர் நெறி. .....**

# குருவாணை ஓலைநாயகம் வரையும் மடல்

*விடுநர்:*

சித்தரடியான் சி.கவிக்குமார் பி.எஸ்.ஸி.,
குருவாணை ஓலைநாயகம்,
அங்காள பரமேச்சுவரி சன்னிதானம்,
பதினெண்சித்தர் சத்தி பீடம்.

குருமகாசன்னிதானம் சித்தர் கருவூரார் தனது வணக்கத்தையும், நல்வாழ்த்தையும் தங்கள் அனைவருக்கும் தெரிவிக்கின்றார்.

ஒரு நாட்டின் மரபு, பெருமை, செல்வம், வனப்பு, வளம், நலம், .... எனும் இன்ன பிற ஊக்கமிக்கதொரு ஆக்கமிக்க நிலையினை அந்த நாட்டின் செல்வத்தை வைத்து கணக்கிடப் படுவதல்ல என்பது தங்கள் அனைவருக்கும் தெரிந்ததே!

இன்றளவும் கிரேக்கம், உரோமானியம், சீனம், பாரசீகம் உள்ளிட்ட பல உலக நாடுகள் மனித குலத்தால் மதித்தும், போற்றப்பட்டும் வருகின்றதென்றால், அந்த நாடுகளின் அழியாத கருவூலங்களாக இலங்கும் இலக்கியத் தொகுப்புக்களால் ஆகும். அதே நேரத்து, நாகரீகச் சின்னங்களால், கலைச் சின்னங்களால் அழியாப் புகழையும், பெருமையையும் அடைகின்ற நாடுகளும் பல உண்டு. ஆனால், இவையிரண்டும் ஒருங்கேயும், முறையோடும், முழுமையோடும் பெற்றுள்ள ஒரு நாடு உள்ளதென்றால் அது நமது தாய்த் திருநாடாகும்.

பழம் பெருமைகளைப் பேசி வீண்பொழுது கழிக்க நாம் முன்வரவில்லை என்றாலும்; நமது பழம் பெரும் உண்மைகளை ஏற்றுப் போற்றிக் கைக்கொள்ளாமல் மறந்தும், மறைத்தும், துறந்தும், துரத்தியும் வருவது கண்டுதான் நாம் சமுதாயத்தின் முன் வருகின்றோம். எண்ணற்ற நூல்கள், கட்டுரைகள், கதைகள், கவிதைகள், ..... நாள்தோறும் மலர்கள் போல் மலர்ந்து கொண்டேயிருந்தாலும்; நாளும் பொழுதும் ஓடிச் சென்று மறைவது போல் மறந்து வருகிறோம்.

ஆனால், நினைவோடும், கனவோடும் நீங்காமல் நிலையாக நமது பேச்சிலும், உணர்விலும் கரைந்தும், கலந்தும், மிதந்தும் வருவது நமது பழம்பெரும் இலக்கியங்களில் தெள்ளிதினிய சில நூல்களால்தான்; சங்க கால இலக்கியங்கள், திருக்குறள், கம்ப இராமாயணம், பெரிய புராணம், திருவாசகம், தேவாரம், .... எனக் குறிப்பிட்ட சிலதான்.

இவைகள் கூட மனிதனின் வாழ்வை முழுமைப் படுத்துவதாகவோ, வாழ்வின் தெளிவார்ந்த நடைமுறைகளை நடைமுறைப் படுத்துவதாகவோ அமையவில்லை. இன்றைய நாகரீக வளர்ச்சி அறிவியல் உதிர்க்கும் புறப் பொருளை ஆராய்வதிலும், அதனை மனிதனுக்கு, மனிதனின் உடலுக்கு சுகம் தேட வைப்பதற்குத்தான் பயன்படுகிறதே தவிர, உலகெங்கும் ஏக்கங்களாலும், ஏமாற்றத்தாலும், ஏளனத்தாலும், அறியாமையாலும், .... இன்ன பிற சமுதாய, இயற்கைக் கொடுமைகளாலும் மனிதன் துன்புறுகின்ற பொழுது; இன்றைய மனிதன் கண்டுபிடித்த எதுவுமே அவனுக்கு துணை வருவதில்லை, வர முடிவதில்லை. இதில் எவருக்கும் ஐயமில்லை. எண்ணிலடங்கா பொங்கி வரும் அவனின் அவல, அழுகை, ஆனந்த, கோப உணர்ச்சிகளை தணிக்கவோ, தணித்து மேலும் அவனை வாழ்வில் நம்பிக்கையோடு நடைபோட வைக்கவோ, இவற்றில் எதுவுமே அவனுக்குத் துணை வருவதில்லை.

ஆனால், இன்றைய சமுதாயம் தேடுகின்ற வாழ்வை, நாடுகின்ற வாழ்வியலமைப்பை, இன்றைய எந்தச் சத்தியும் அவனுக்குத் தருவதில்லை. அவன் பாடுகின்ற கவலைப் பாடலை, கண்ணீர்க் கீதத்தை தீர்க்கும் இன்னிசைப் பாடல் இன்று இவ்வுலகில் இல்லை. ஆனால், மனிதன் தேடுகின்ற அனைத்தையும் ஒட்டு மொத்தமாக்கி கலையால், சமயத்தால், அறிவியலால், இல்லறம் என்னும் நல்லறத்தால், இனிமை என்னும் நாதத்தால், பண்பால், மரபால், ..... உலகை முறையோடும், நெறியோடும், நேர்மையோடும் நடை போட்டிட, பைய நடை பயின்றிட வைத்தது, வைப்பது "**<u>சித்தர் நெறி</u>**" ஒன்றேயாகும்.

மனித குலமே ஒன்றுதிரண்டு வந்து ஒருங்கே கூடி கேள்விக் கணைகளைத் தொடுத்தாலும் கூட, அவை அத்தனைக்கும் விடை கூறி, அதன் பொருள் கூறி, அதனின் பயன் கூறி நடத்தி அழைத்துச் செல்லக் கூடிய தரமும், திறமும் படைத்த ஒன்று உண்டென்றால் அது "**<u>சித்தர் நெறி</u>**" ஒன்றேயாகும்.

இதை எப்படி ஆணித்தரமாக கூற முடிகின்றதென்றால்; காற்றில் பறந்து மிதந்து செல்லக் கூடிய மென்மையான ஆல விதை விதையிட்டு, முளைத்து, கிளைத்து நிற்கின்றது. அப்படி நிற்கின்ற மரம்தான் காற்றினுக்கும், மழையினுக்கும், வெயிலினுக்கும் ஈடுகொடுத்து நிற்க இயலும். இதைப் போல்தான், ஆதியையும், அதன் வளர்ச்சியையும் அனுபவத்தின் வாயிலாக, நேரில் மக்களை அறிந்ததின் வாயிலாக பல கோடி ஆண்டுகளில், பல நூறு அண்டங்களில் சந்தித்ததின் வாயிலாக, இம்மண்ணுலகில் தங்கள் அனுபவத்தையும், உண்மையையும் விதையாக இட்டு, வளர்த்து செழித்ததின் வாயிலாகத்தான் இன்று எந்த ஒரு மதமும், எந்த ஒரு தலைவரும், எந்த ஒரு மொழியும் உரைக்க முடியாத, மனித சமுதாயத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய ஒரு பொறுப்பை, நிலையை,

தன்மையை நிறைவு செய்ய முடியும், முடிகின்றது என்றால்; அதற்குக் காரணம் முறையோடும், நெறியோடும் வளர்ச்சி உற்றதனாலேயே ஆகும்.

காற்று உள்ளளவும், கடல்நீர் உள்ளளவும் ‘தமிழ் மொழி’, ‘தமிழினம்’, ‘தமிழ்நாடு’ இவற்றின் தரம், திறம், அறம், மறம், .... ஆகியவை மங்காமல் ஒளி வீசி வருகின்றதென்றால், இவற்றின் முறையான வளர்ச்சி இயற்கையினூடே உருவாக்கப் பட்டதேயாகும்.

இங்கு திறன்மிக்க, தத்துவமிக்க ஒன்று இன்று மேடிட்டு மூடப்பட்ட கோபுரமாய், தாளிட்ட கருவூல அறையாய் கிடக்கின்றதென்றால் காரணம் என்ன? கடந்த கால வரலாறுகள் இந்த தத்துவத்தை மறைத்த போதிலும் கூட ‘ஈடு இணையற்ற தத்துவங்களை ஏட்டிலே எழுதி தொகுத்து பாதுகாத்து வைத்து நாளைய சமுதாயத்திற்கு வைத்து விட்டுச் சென்ற பெருமை’ தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரூருக்கு உரித்தானது.

இன்றைய தஞ்சைப் பெரிய கோயிலில் தனியிருக்கை (சன்னதி) கொண்டுள்ள கருவூரார் (கி.பி.785-1040) அன்று எழுதி வைத்துவிட்டுச் சென்ற நூல்களினால்தான் இன்றைய சமுதாயம் மீண்டும் விழிச்சியுற்றிட, எழுச்சி பெற்றிட, செழுச்சி உற்றிட தூண்டுகோலாக அமைகின்றது. ஆனால், அத்தூண்டுகோல் காற்றில் அணைகின்ற சிறு அகல் விளக்காய் மாறிடாமல் பாதுகாக்க வேண்டிய மாபெரும் பொறுப்பு உங்களைப் போன்ற நல்ல சமுதாயப்பணி புரிகின்றவர்களிடத்தே உள்ளது.

இன்றைய வேகம் நிறைந்த மக்கள் எந்த அளவிற்கு போற்றுவார்களோ! தூற்றுவார்களோ! என்று சோதிடம் பாராமல், விதை விதைப்போம்! நீரை ஊற்றுவோம்! பலன் தராமலா போய்விடப் போகின்றது? என்ற நம்பிக்கையுடன் சமய இலக்கிய மறுமலர்ச்சியை,

சிந்தனைப் போக்கை, அறிவுத் தாகத்தை இன்றைய மக்களிடையில் உண்டாக்க முடியுமென்றால்; அது புதிய பாணியில், புதிய கருத்தில் மூழ்கி வருகின்ற வண்டனைய நூல்களால்தான் இயலும். மதம், கலை, அறிவியல், .... எனும் மனித அளவிற்கு உட்பட்ட தேவையான, தேடுகின்ற அனைத்துக் கருத்துக்களைக் கொண்ட நூல்களை சித்தர்கள் அனைவரும் எழுதியே வந்திருக்கின்றனர். இன்றைய குருமகா சன்னிதானமும் அதே வழியில்தான் செயல்பட்டு வருகின்றார்.

எண்ணற்ற பழம்பெரும் நூல்களையும், தான் எழுதிக் குவித்து வரும் எண்ணற்ற நூல்களையும் தன் கண்ணெனப் பேணிப் பாதுகாத்து வருபவரே இன்றைய குருமகா சன்னிதானம். அவரது பொறுப்பு மிக்க பொறுமை வெறுமையாகி விடக் கூடாது என்ற பொறுப்புணர்ச்சியால்தான் என் போன்ற எண்ணற்ற இளைஞர்கள் இரவு பகலாக ஏடுகள் நைந்தும், எழுத்துக்கள் மங்கியும், சிதிலமுற்று வருகின்ற நூல்களை யெல்லாம் நகலெடுத்து வருகின்றோம். எங்களுடைய கண்கள் உறக்கத்தை நாடவில்லை. எங்களுடைய கைகள் ஓய்வைத் தேடவில்லை. உணர்வு சலிப்படையவில்லை. இருந்த போதிலும், தமிழ் மொழி காக்க, தமிழர் சமயம் காக்க, தமிழர் நலம் காக்க எண்ணற்ற அமைப்புகளும், தலைவர்களும் பெருகிக் கொண்டே வருகின்ற இத் திருநாட்டில் தமிழ்மொழி காக்க, தமிழர் சமயம் காக்க, தமிழின நலங் காக்க எங்களைப் போன்றோரால் நகலெடுத்துக் காக்கப்பட்டு வரும் நூல்கள் அச்சேறி அங்காடிக்கு வருவதுதான் உரிய, உண்மையான, உருப்படியான வழி.

முடிவில் தமிழர்கள் தங்களுடைய மொழி, இன, சமய, சமுதாய, இலக்கிய, கலை, அரசியல், வரலாற்றுப் பெருமைகளையும், பண்பாட்டுப் பாரம்பரியங்களையும், நாகரீகக் கூறுகளையும், மரபுவழிப் பெருமைகளையும், வரலாற்று வழி உரிமைகளையும் தெரிந்து, அறிந்து,

புரிந்து, தெளிந்து, உணர்ந்து, நம்பி, ஒப்புக் கொண்டு செயலாக்கிடல் வேண்டும். அதன்பிறகுதான் இவற்றையெல்லாம் அண்டை மாநிலங்களிலும், அயல் நாடுகளிலும் உணரச் செயல்படும் பணி துவக்கப் படல் வேண்டும். அதாவது தமிழ்மொழியில் வெளியிடப்பட வேண்டிய நூல்கள் அனைத்தும் பெரும்பாலான உலக மொழியில் மொழி பெயர்க்கப்பட்டே தீர வேண்டும். இம்மாபெரும் பயன் மிக்க, நன்மை மிக்க செயல்திட்டத்திற்கு உதவும்படி அரசுகளையும், அரசு சார்ந்த இயக்கங்களையும், சமுதாயத் தலைவர்களையும், சமயத் தலைவர்களையும், தனிப்பெரும் தலைவர்களையும், செல்வர்களையும் உதவுமாறு கேட்டுக் கேட்டு அலுத்துப் போய்விட்டோம். எங்குமே உண்மையான தமிழார்வத்தையோ, தமிழினப் பற்றையோ காண முடியவில்லை. எங்கும் போலிகளும், கூலிகளும் மலிந்துள்ள காரணத்தினால் தங்களைப் போன்று அவ்வப்போது எதிர்பாராது அறிமுகமாகின்றவர்களிடம் மட்டுமே இன்றைய குருமகா சன்னிதானம், பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, இராசிவட்ட நிறைவுடையார், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்களின் நெடிய, பெரிய, இடையீடற்ற, தன்னம்பிக்கை மிக்க, துணிந்த, நற்பயன் நல்கக் கூடிய பணிகளைப் பற்றிக் கூறி வருகின்றோம்.

என்னைப் போன்ற இளைஞர்கள் எங்களுடைய பொருளாதார வசதி வாய்ப்புகளுக்கேற்ப நல்ல தாள்களும், நல்ல ஊற்றுக்களும் (Ink) விலைக்கு வாங்கி; முடிந்தவரை குருதேவர் அவர்கள் காத்து வருகின்றவைகளையும், வித்திட்டு வருகின்றவைகளையும் விரைந்து நகலெடுத்து உலகெங்கும் விரிந்து பரவிடச் செய்து வருகின்றோம். எங்களுடைய உணர்வுகள் குருதேவருடன் ஒன்றிவிட்டன என்பதற்கு சான்றாக அவருடைய கருத்தோட்டங்களைப் போலவே பெற்று வருகின்றோம். என்னைப் போன்ற எண்ணற்ற இளைஞர்களுடைய தன்னம்பிக்கையும், தளராத முயற்சியும் வளராத தத்துவங்களையும்

வளர்க்கும்; மலராத திட்டங்களையும் மலர வைக்கும். இதில் எங்களுக்கும், எவருக்கும் எள்முனையளவு கூட ஐயமில்லை.

குருதேவர் அவர்கள் ஒரு மாபெரும் தத்துவத்தின் உரிமைக்குரிய பெருமைமிக்க வாரிசாவார். இவர் அளந்தறிய முடியாத தொன்மை படைத்த தத்துவத்தை உலகத்தார் அத்தனை பேரும் துய்த்து, மகிழ்ந்து உய்வு பெற வேண்டும் என்ற பெருநோக்கில் தனது தனிப்பட்ட வாழ்வை உலக வரலாறாக வளர்த்து வருகின்றார். இவருடைய வெற்றி தோல்வி தனியொரு மனிதனின் வெற்றி தோல்வியாக அமைந்திடாது. அது இந்த மண்ணுலகின் முதல் மனித இனமான தமிழினத்தின் மாபெரும் எழுச்சி வரலாறாக, தாழ்ச்சி வரலாறாக ... உருவாகவே நேரிடும்.

சித்தர்கள் மடமைவாதிகள் (Superstitious) அல்ல, பழமைவாதிகள் (Conservatives) அல்ல, மத வெறியர்கள் (Religious Fanatics) அல்ல, காட்டுமிராண்டித்தனமான கற்பனைவாதிகள் (Men of Wild Dreams) அல்ல, பகற்கனவு காண்பவர்கள் (Men of Day Dreamers) அல்ல, .... என்பதை முதலில் தமிழர்கள் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். பிறகு இந்தியத் துணைக்கண்டத்து பெருமக்கள் புரிந்து கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் பகுத்தறிவு (Rationalism), சீர்திருத்தம் (Reformation) என்ற பெயர்களால் நாத்திகவாதம் (Atheism) முட்புதர் போல் முளைத்து, கிளைத்து கிடப்பதை வேரோடு பறித்து அழித்தொழிக்க முடியும். ஏனெனில், சித்தர்களை விட சிறந்த பகுத்தறிவுவாதிகள் (Rationalists), முற்போக்குவாதிகள் (Radicalists), சீர்திருத்தவாதிகள் (Reformers), புரட்சிவாதிகள் (Revolutionaries), விஞ்ஞானிகள் (Scientists), சிந்தனையாளர்கள் (Thinkers), மேதைகள் (Scholars), .... இவ்வுலகின் எந்தப் பகுதியிலும், எந்த இனத்திலும் இதுகாறும் தோன்றவேயில்லை. அவர்களே அறிவியல் அடிப்படையில் தனிமனித வாழ்வின்

செம்மைக்கும், சமுதாய வாழ்வின் கட்டுக்கோப்புக்கும், மானுட இனத்தின் கூட்டுடமைக்கும், பொதுவுடமைக்கும், சமத்துவத்திற்கும், சகோதரத்துவத்திற்கும் நிலையான வழிவகைகளைக் கண்டு அவற்றை முழுமையாகச் செயல்படுத்திச் சென்றிட்டார்கள். ஆனால், நாற்றங்காலிலேயே பயிருக்கு நோய் வந்துவிட்டது போல், தமிழர்களிடையிலேயே சித்தர் நெறித் தத்துவத்தின் செல்வாக்கையும், செயலையும் இழக்க நேரிட்டு விட்டது. எனவேதான், நாற்றங்கால் பயிருக்கு நோய் நீக்கத்திற்கும், நோய் தடுப்பிற்கும், வளத்திற்கும், செழிப்பிற்கும் உரிய முயற்சிகளை உரிய அளவில் பொறுமையோடு அமைதியாகச் செயலாற்றி வருகிறார் எங்களது குருதேவர்.

மந்திர மாயங்களால் மட்டும் ஆனதல்ல சித்தர் நெறி. மருத்துவங்களாலும், இரச வாதங்களாலும் மட்டும் வலிமைப் படுத்தப் பட்டதல்ல சித்தர் நெறி. அதில் அடங்காதது எதுவுமே இல்லை எனச் சுருக்கமாகக் கூறி அஞ்சலை முடிக்கின்றேன்.

**அன்பு**

**சி. கவிக்குமார்.**

**//உண்மை நகல்//**

**//இதன் மூலம்: தட்டச்சு செய்த நகலாகக் கிடைத்தது.//**

# <u>ஞானம் வழங்கு பருவபூசை</u>

## <u>முன்னுரை</u>

ஆண்டுதோறும் நிகழ்த்தப்பட்டு வரும் வைகாசித் திங்கள் முழுநிலவுப் பருவபூசை உலக மக்களுக்கு 'ஞானம் வழங்கு பருவபூசை'யாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இது, மனித இனத்தின் பண்பாட்டு வரலாற்றில் குறிப்பிட்ட காலக்கட்டங்களில் பதினெண்சித்தர் பீடாதிபதிகளாலும்; அவர்களின் விந்துவழி வாரிசுகளாலும்; குருவழி வாரிசுகளாலும் தேவைகளுக்கேற்ப நிகழ்த்தப்படுகின்ற ஒரு மாபெரும் நிகழ்ச்சியேயாகும். கடந்த மூன்று உகங்களிலும், இந்த நான்காம் உகத்தின் 5000 ஆண்டுகளிலும்; மனித வாழ்வைச் செம்மைப்படுத்த, மேம்படுத்த உழைத்து உழைத்து இந்து மதம் மெலிவும், நலிவும் அடைய நேரிட்டு விட்டது. அதற்குக் காரணம் தன்னல வெறியர்களின் சூழ்ச்சிகள், சுரண்டல்கள், ஏமாற்றுக்கள், கற்பனைகள், ... முதலியவைகளும்; அறியாமை மிக்கவர்களின் மூடநம்பிக்கைகளும், மடமைப் பழக்கவழக்கங்களுமே யாகும்.

**<u>இந்து மதம் என்கின்ற தாயின் மக்களே உலக மதங்கள்</u>.** <u>இப் பேருண்மையினை உணர முடியாமையாலும், முயலாமையாலும் உலக மதங்கள் அனைத்தும் தங்கள் தங்களின் மதம்தான் வளர வேண்டும், ஆட்சிபெற வேண்டும் என்ற கருத்தில் போட்டியிட்டுப் போராடுகின்றன</u>. இதனால், பதினெண்சித்தர்கள் மானுட இனத்தின் நன்மைக்காக உருவாக்கிய மதம் எனும் துறை; மானுட இனத்தின் தீமைக்காகப் பயன்படும் ஒன்றாகி விட்டது. இதனை மத வாதிகள் உணராமல் இல்லை. ஆனாலும், மத மறுப்பாளர்களும், வெறுப்பாளர்களும் மதமெனும் துறையையே தீய்த்து மாய்த்து

ஒழித்திட மதத்தின் சில குறைபாடுகளைப் பெரிதுபடுத்திச் செயல்படுத்திட ஆரம்பித்திட்டார்கள்.

இப்படிப்பட்ட இக்கட்டான காலக்கட்டத்தில்தான் மத வாதிகளுக்கும், மதத்தின் எதிரிகளுக்கும் மதத்தின் அருமைபெருமைகளையும், அரிய பெரிய சேவைகளையும், இன்றியமையாத் தேவை நிலைகளையும் விளக்கி உரைக்க வேண்டிய இருதலை நிலை உருவாகியிருக்கின்றது. இதனை முறையாகவும், முழுமையாகவும், மென்மையாகவும், நன்மையாகவும், எளிமையாகவும், எல்லோருக்கும் ஏற்புடையதாகவும், அறிவியல் பூர்வமானதாகவும், ஆன்மீக அடிப்படை கொண்டதாகவும் ... செய்திட வேண்டியிருக்கிறது.

குறிப்பாக, மத வாதிகளுக்கு இடையில் இருக்கக்கூடிய போட்டிகள், பொருமைகள், சண்டை சச்சரவுகள், சூழ்ச்சிகள், சூதுகள், நேரடிப் போர்கள், ... முதலியவை உடனடியாக உணர்வுப் பூர்வமாக நிறுத்தப்பட வேண்டிய பணியே நிறைவேற்றப்பட வேண்டிய ஒன்றாக இருக்கின்றது. இருந்த போதிலும், இப்பணியுடனேயே மத மறுப்பு, வெறுப்பு, எதிர்ப்பு, கசப்பு, நம்பிக்கையின்மை, ... முதலிய உணர்வுகளைப் பகுத்தறிவு நோக்கிலும், விஞ்ஞானச் சூழலிலும் மாற்றிடும் பணியும் ஆற்றிட வேண்டியிருக்கிறது. எனவே, எவரும் அவசரமோ, ஆத்திரமோ, பதட்டமோ, குழப்பமோ, கலக்கமோ, எதிர்ப்புணர்வோ, மறுப்புணர்வோ ... வெளிப்படுத்தாமல் பொறுமையுடனும், பொறுப்புடனும் எங்களுடைய தத்துவங்களையும், சித்தாந்தங்களையும், வேதாந்தங்களையும், செயல்திட்டங்களையும், மற்ற கொள்கைகளையும், குறிக்கோள்களையும் ஏற்றுச் சிந்தித்துத் தெளிவு பெற்று; பிறகு, தேவையான விளக்கங்களை எங்களிடமிருந்து பெற்று, அவற்றின் அடிப்படையில் முடிவெடுத்துச் செயல்படுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இக் கலியுகத்தின் 5000 ஆண்டு இடைவெளியில் இந்து மதம் பதினெண்சித்தர்கள் வழங்கிய உண்மையான நிலைகளையும், வடிவமைப்புக்களையும், செயல்முறைகளையும் ... பெருமளவு இழந்து தேக்கம் பெற்றுவிட்டது. எனவேதான், இந்து மதத்தால் மக்களுக்கு நேரடியான, உடனடியான, உண்மையான நன்மைகளைச் செய்ய முடியவில்லை. இவற்றை மாற்ற வேண்டுமென்றால், இந்து மதம் மிகப்பெரிய சோதனைகளையெல்லாம் பெற்றிட்ட காலக்கட்டத்தில்; (1) ஆதிசங்கரர், சித்தர்களின் கருத்துக்களின் அடிப்படையிலேயே காப்பாற்றிக் கொடுத்ததையும்; (2) தந்தை பெரியார் ஈ.வெ.ரா. சித்தர்களின் கருத்துக்களின் அடிப்படையிலேயே மத விழிச்சியையும், எழுச்சியையும் உண்டாக்கியதையும்; (3) போத்தர் மோகன்லால் கரம்சந்த் காந்தி மத உணர்வை மாபெரும் அரசியல் உணர்வாக்கிக் காட்டியதையும்; (4) மேலைய நாட்டுச் சிந்தனையாளர் காரல் மார்க்சு மதத்துக்கும், மானுடவாழ்வுக்கும் இடையே உள்ள தொடர்பு நிலைகளை விளக்கிக் காட்டியதையும்; அடிப்படையாகக் கொண்டு இந்து மறுமலர்ச்சி இயக்கப் பணிகள் திட்டமிடப்பட்டுச் செயலாக்கப் பட்டு வருகின்றன.

அதாவது மேற்கூறிய ஆதிசங்கரர், பெரியார் ஈ.வெ.ரா., போத்தர் மோகன்லால் கரம்சந்த் காந்தி, காரல் மார்க்சு என்கின்ற நான்கு பேரின் வாழ்வியலும், வாழ்வியல் சிந்தனைகளும், சாதனைகளும் முழுமையாக உரிய அளவில் பயன்படுத்தப் பட்டிட்டால்தான் இந்து மதம் எனப்படும் உலக முதல் மதம், மூல மதம், தாய் மதம் மறுமலர்ச்சி அடைய முடியும். இதற்காகத்தான், கடந்த இரண்டு நூற்றுண்டுகளுக்கு மேலாக வளர்ந்து வரும் இந்து மறுமலர்ச்சி இயக்கம் இன்றைய நிலையில் மேற்கூறிய நான்கு பேர்களுக்கும் சித்தர் நெறிப்படி ‘ஞானசித்தர்’, ‘நாயனர்’, ‘போத்தர்’, ‘நவநாத சித்தர்’ ... என்று வழங்கித் தமது பணியினைத்

துவக்கியிருக்கிறது. இதனைப் புரிந்து செயல்படுமாறு அனைவருக்கும் வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது.

அதாவது, மேற்கூறிய நால்வருமே மதச் சீர்திருத்தவாதிகள்தான்; மக்களுக்கும் மதத்துக்கும் இடையேயுள்ள தொடர்புகளை செம்மைப்படுத்த, செழுமைப்படுத்த முயன்றவர்கள்தான் என்ற பேருண்மையினை உலகுக்குத் தெளிவுபடுத்தும் மாபெரும் பணியே இன்றைய இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் பணியாகும்.

குறிப்பாக, காரல் மார்க்சை எல்லோருமே நாத்திகரென்றும், மத மறுப்பாளர் என்றுமே கூறுகிறார்கள். இது தவறு. ஏனெனில், காரல் மார்க்சு 'உழைக்கும் வர்க்கம் தனக்கு உரியவைகளையும், உரிமைகளையும் பெறுவதற்காக வீறிட்டுக் கிளம்பிப் போரிட்டு விடாமல் மயங்கிய நிலையில் அடிமையாகவும், கோழையாகவும், ஏமாளியாகவும், அப்பாவியாகவும் வாழ்வதற்குக் காரணமே மதமெனும் மயக்கப் பொருளால்தான் …' என்று மிகத் தெளிவாக மதத்தை ஒரு மயக்கப் பொருள்தான் எனக் கூறினாரே தவிர; அவர், '… மதம் மக்களை மாய்க்கும் கொடிய நஞ்சு' என்று கூறவேயில்லை. இதன்படிப் பார்த்தால் மயக்கத்தைத் தராத மதம் காரல் மார்க்சுக்கு வெறுப்பானதோ, மறுப்பானதோ அல்ல. அதாவது, அவர், நாத்திகருமல்ல, மத மறுப்பாளருமல்ல; அவர் ஒரு மாபெரும் மதச் சீர்திருத்தவாதியே.

இவரைப் போலவே, இந்த நூற்றாண்டில் வாழ்ந்த பகுத்தறிவுப் பகலவன், சிந்தனைச் சிற்பி, தமிழினத் தந்தை, தந்தை பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் ஒரு நாத்திகரல்ல; மதமறுப்பாளரோ, வெறுப்பாளரோ அல்ல; அவர், எல்லோரும் கோயில் கருவறைக்குள் சென்று பூசை செய்யும் உரிமையினைப் பெற வேண்டும்; எல்லாச் சாதியினரும் கோயில் குருக்கள்களாக பணியாற்றும் சம வாய்ப்பினைப் பெற வேண்டும்; கோயில்களில் தமிழ்மொழி வழியாகத்தான் வழிபாடு

நிகழ்த்தப்பட வேண்டும்; இந்து மதத்தில், பார்ப்பனர்களால் மூடநம்பிக்கைகளும், ஆபாசக் கற்பனைகளும், மடமைகளும், சுரண்டல்களும், ஏமாற்றுக்களும், சாதி வேறுபாடுகளும், தீண்டாமைக் கொடுமைகளும், பிற சமுதாய அநீதிகளும், ... வளர்க்கப் படுவதைத் தடுக்க வேண்டும்; அகற்ற வேண்டும்; சீர்திருத்த வேண்டும் ... என்ற கொள்கைகளைத்தான் வலியுறுத்தினர். மேற்கூறிய கருத்துக்களைச் செயலாக்குவதற்காகத்தான் அவர், மிகமிகக் கடுமையான கசப்பான போராட்டங்களையெல்லாம் துணிவோடு நிகழ்த்தினர். அவர் மதமே தேவையில்லை! கோயிலே கூடாது! வழிபாடுகளே தேவையில்லை! ... என்றெல்லாம் நினைத்திருந்தால் மேற்கூறிய மதச் சீர்திருத்தக் கருத்துக்களையும், பணிகளையும் வழங்கியிருக்கத் தேவையேயில்லை. இப் பேருண்மையினை இனியாவது தமிழர்கள் மட்டுமாவது புரிந்து கொள்ள வேண்டும்! புரிந்து கொள்ள வேண்டும்!! புரிந்து கொள்ள வேண்டும்!!!

பதினெண்சித்தர்கள் தங்களுடைய தாய்மொழியான தமிழ்மொழியின் மூலம் இந்த உலகுக்கு வழங்கிய இந்து மதத்துக்கு உரியவர்கள் தமிழர்களேயாவார்கள், எனவே, தமிழன் மொழிப்பற்றும், இன ஒற்றுமையும், நாட்டுரிமையும் பெற்று உயர்ந்தால்தான் இந்து மதம் உயர்வு பெறும், உய்வு பெறும், வாய்மை பெறும், வடிவம் பெறும், வாழ்வு பெறும்.

அதாவது, இந்து மத வளர்ச்சிப் பணியே தமிழர்களின் விழிச்சிக்கும், எழுச்சிக்கும், செழுச்சிக்கும் வழியாகிடும். இதனை உணர்ந்து தமிழர்கள் **'இந்து மதம் வாழ்க!'**, **'தமிழ்மொழி வாழ்க!'**, **'தமிழினம் ஒற்றுமை ஓங்குக!'**, **'தமிழின விடுதலை உணர்வு செழித்திடுக!'** என்று முழங்கிட முன்வர வேண்டும்.

தமிழினமே உன் ஒற்றுமைக்காகவும், வளர்ச்சிக்காகவும், மலர்ச்சிக்காகவும் செயலாற்றப் புறப்பட்டிருக்கும் இனத் தலைவரை, மொழியின் தந்தையை, மதத்தின் குருதேவரை புரிந்துகொள்! புரிந்துகொள்! புரிந்துகொள்!

**இப்படிக்கு,**

**சித்தர்நெறியினர்.**

ஓம் திருச்சிற்றம்பலம்

# பூசா விதி

7/4/84,

சனிக்கிழமை காலை 9-10½.

1) 7/4/84 இன்று முதல் ஓக, யோக, போக, மோக, தவப் பயிற்சிகள் 'இருக்கை முறைகள்' [இச்சொல் "ஆசனம்" என்று ஆரியர்களால் குறிக்கப்படுதல் மரபு.] அனைத்துக் கருக்கள், குருக்கள், தருக்கள், திருக்கள், தாத்தாக்கள் ஆத்தாக்கள், உலக அருளாளர்கள் விருப்பார்ந்த ஒப்புதலோடு குருதேவர், தலைவர், ஞானத்தந்தை, அரசயோகி, அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம் ... என்ற நிலைகளை அடைந்துள்ள இந்து மதத் தந்தை, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரர், பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி அவர்களால் துவக்கப் பட்டுவிட்டன. இதுவே அனைத்து அடியான்கள், அடியாள்கள், அடியார்கள், ஆர்வலர்கள், ஆதரவாளர்கள், மத விருப்பாளர்கள் அனைவருக்கும் அறிவிப்பு. அவரவர் வசதிவாய்ப்புப்படி அன்றாடம் ஒரு முறையாவது காயந்திரி

மந்தரம் ஓதுதலும்; கலசப் பூசை செய்தலும் நிகழ்த்துதல் வேண்டும்! வேண்டும்! வேண்டும்!

**அனைவரின் ஒப்புதலும் பெற்ற குருவானை.**
**ஞாலகுரு சித்தர் கருவூரார்.**
**7/4/84.**

2) பதினெண்சித்தர் பீடாதிபதிகள் பூசாவிதிகளையும், மொழிகளையும், நெறிகளையும், முறைகளையும், சட்டதிட்டக் கட்டுப்பாடுகளையும் திருமந்திற ஓலைநாயகம் என்று ஒருவரை உருவாக்கியே அவர் மூலம் உலகுக்கு வழங்குவர். எனவே, அருட்பட்டம் பெற்றவர்கள் தங்களின் பூசைகளில் திருமந்திற ஓலைநாயகம், பதினெண்சித்தர் சிவசத்தி பீடம், வீரமாகாளி - ..... ..... .....

***[நகலில் ஒரு முழுப் பக்கம் இல்லை.]***

..... ..... ..... குறிப்பாக **எல்லோரும் காண முடியாத பூசைக்குரிய பெட்டகங்களுக்குள் ஓலைச்சுவடிகளாக உறங்கும் செய்திகளையும்; செவிவழிச் செய்திகளாகவும்; வெளியே பிறருக்குக் கூறினாலேயே பெரிய பாவமென்று பாதுகாக்கப்படும் (இரகசியம்) மறைச் செய்திகளாகவும் ... இருப்பவைகளையும் அச்சிட்டு அனைவரும் படித்திடும் நூல்களாக வெளியிடத் தேவையான பொருளுதவிகளை வழங்குபவர்களுக்கும்; உடலுழைப்பை வழங்குபவர்களுக்கும் மிகுந்த அருள்நலம் விளையுமென்று குருபாரம்பரியம் கூறுகிறது.**

**அனைவரின் ஒப்புதலும் பெற்ற குருவானை.**
**ஞாலகுரு சித்தர் கருவூரார்.**
**7/4/84.**

## 4) பூசாவிதிகள்

1. கருவறைப் படி, 2. கருவறை விதி, 3. கருவறை மரபு, 4. கருவறை ஒழுகலாறு, 5. குருமார் ஒழுக்கம் (குருமார் ஒழுகலாறு), 6. மந்திறம், 7. மந்திரம், 8. மந்தரம், 9. மாந்தரம், 10. மாந்தரீகம், 11. தந்திறம், 12. தந்திரம், 13. தந்தரம், 14. தாந்தரம், 15. தாந்தரீகம், 16. எந்திறம், 17. எந்திரம், 18. எந்தரம், 19. ஏந்தரம், 20. ஏந்தரீகம், 21. தோத்திறம், 22. தோத்திரம், 23. தோத்தரம், 24. சாத்திறம், 25. சாத்திரம், 26. சாத்தரம், 27. சூத்திறம், 28. சூத்திரம், 29. சூத்தரம், 30. அத்திறம், 31. அத்திரம், 32. அத்தரம், 33. நேத்திறம், 34. நேத்திரம், 35. நேத்தரம், 36. கருவாக்கு, 37. கருவாசகம், 38. குருவாக்கு, 39. குருவாசகம், 40. திருவாக்கு, 41. திருவாசகம், 42. தருவாக்கு, 43. தருவாசகம், 44. அருள்வாக்கு, 45. அருள்வாசகம், 46. மருள்வாக்கு, 47. மருள்வாசகம், 48. சுருதிகள், 49. ஆகமங்கள், 50. ஆரணங்கள், 51. மீமாம்சைகள், 52. நேமங்கள், 53. நியமங்கள், 54. நிடதங்கள், 55. நிட்டைகள் {நீதிகள்}, ... ...

***[நகலில் இப்பக்கத்தின் தொடர்ச்சி கிடைக்கவில்லை.]***

.... -கணக்கீட்டுக்கு உட்பட்ட எந்த மதத்தாலும் இவ்வளவு பெரிய வளர்ச்சியையும், வளத்தையும், தெளிவான அடிப்படைகளையும், வழிமுறைகளையும் பெற்றிட முடியாது! முடியாது! முடியாது! முடியவே முடியாது! மேலும், தமிழ்மொழியில்தான் மேற்கூறிய அறுபத்துநான்கு வகையான நூல்களும் இருப்பதால் பதினெண்சித்தர்கள் கணக்கற்ற கோடியாண்டுகளுக்கு முன்னர் தமிழ்மொழியில்தான் இந்து மதத்தை வெளியிட்டனர் என்ற பேருண்மையும் விளங்குகிறது. எனவே, பத்திமொழி, சத்திமொழி, சித்திமொழி, முத்திமொழி ... தமிழ்மொழிதான் என்ற பேருண்மை மிகமிகத் தெளிவாக விளங்குகிறது. இதனை அருட்பணி விரிவாக்க நிலையங்களில் தமிழில் அருளூறு பூசாமொழிகளை

ஓதி அருளை அநுபவப் பொருளாக வழங்குவதாலும் அறியலாம்! புரியலாம்! தெரியலாம்! உணரலாம்!

5) பதினெண்சித்தர்கள் "... (i) ஒவ்வொரு தனிமனிதனும் தன்னையறிந்து பிறரை அறியவும்; (ii) பற்றும், பாசமும், அன்பும், உறவும், உரிமையும், இன்பமும், அமைதியும், அழகும், நிறைவுமுடைய குடும்ப வாழ்வை விரும்பிப் போற்றி ஏற்று வாழவும்; (iii) தோழமை, நட்பு, சமாதானம், ஒருவருக்கொருவர் உதவுதல், அடைக்கலம் நல்கல், ஆதரவு தருதல், கூடிவாழல், அனைவரும் சமமாகப் பகிர்ந்துண்டு வாழல், ஒற்றுமையுடன் ஒருங்குகூடி இணைந்து வாழல்; ... முதலியவற்றால் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம் அமைத்திடுதல்..." என்று மூன்று வகையான வாழ்க்கையையே இந்து மதத்தின் மூலம் மனித இனத்துக்கு வழங்கினர்.

மேலும், "... தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு எனும் முக்கோணக் கோட்டையின் ஆட்சியே அருளாட்சி..." என்று அறிவிப்புச் செய்தே இந்து மதத்தை வழங்கியுள்ளனர் பதினெண்சித்தர்கள். எனவேதான், **'எல்லாவித அரசியல் தத்துவங்களுக்கும் சித்தாந்தங்களுக்கும் அப்பாற்பட்ட, மேம்பட்ட, உயரிய, சீரிய, அரிய, பெரிய, நன்மைதரு, பயன்மிக்க ஒரு மாபெரும் சமய, சமுதாய, அரசியல், கலை, இலக்கிய மனித வாழ்வுக் கொள்கையே சித்தர்நெறி எனும் இந்து மதம். இது ஒரு சமுதாயக் கொள்கையே.** [The Induism is a Social Philosophy, Policy and Principle. All other Social and Political Philosophies are only the daughters of this Induism.] **இந்தக் கொள்கைத் தாயின் மகள்களாகத்தான் இம்மண்ணுலகிலுள்ள அனைத்துச் சமுதாய அரசியல் தத்துவங்களும் பிறந்திருக்கின்றன'** என்ற பேருண்மையை உணருபவர்கள் உலகுக்குப் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகார

அரசாங்கமோ! தொழிலாளிகளின் சமத்துவ அரசாங்கமோ! மக்களின் குடியாட்சி அரசோ! ... தேவையென்று அலைய மாட்டார்கள்.

அதாவது, அரசாங்கம் எத்தகையதாக இருக்க வேண்டுமென்ற வாதங்களுக்கே இடமில்லை. பதினெண்சித்தர்களின் கொள்கையும், குறிக்கோளும், நடைமுறைச் சித்தாந்தமும், செயல்திட்டத் தத்துவமுமான 'சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம்' ..... உலகம் முழுதும் அமைந்து விட்டால் போதும். அதன்பிறகு, 'அரசியல்' என்ற துறைக்கே இடமில்லை; யார் நாடாண்டாலும் கவலையில்லை! எப்படிப்பட்ட அரசாங்க அமைப்பு இருந்தாலும் பாதகமில்லை! எவர் அரசின் தலைவராக இருந்தாலும் அக்கரையே இல்லை! எந்த இயக்கம் ஆட்சியிலிருந்தாலும் பொருட்படுத்தவே தேவையில்லை!

இதுதான், பதினெண்சித்தர்களின் இந்து மதம் தரும் '... தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு என்ற மூன்றும் தனித்தன்மையோடும், உண்மையோடும், உரிமையோடும், பெருமையோடும் வாழுவதற்குத் தரும் வளமிகு வழிகள்...' இந்த வழிகளே அனைத்துலக நாடுகளுக்கும் வழங்கும் தரமும், திரமும், உரமும், அறமும், மறமும் உடையன. அதாவது, இந்து மதமே உலகம் முழுதும் மனித வாழ்வின் உரிமைகளையும், உறவு முறைகளையும் பெருமையோடு பேணி வளர்த்து அணி செய்யும் ஆற்றலுடையது.

எனவே, 'இந்து மதம்தான் உலகச் சமய சமுதாய அரசியல் கலை இலக்கியத் தொழில் துறைகள் அனைத்துக்கும் நலமும், வளமும், வாழ்வும் அளிக்கக் கூடிய ஆற்றல்மிக்க ஒரு மாபெரும் தத்துவமாகிறது' என்ற பேருண்மையை ஒவ்வொரு மனிதனும் உணருமாறு செய்வதே இன்றைய இந்துக்களின் கடமையாகும். இதனை உணர்ந்தும் உணர்த்தியும், புரிந்தும் புரியவைத்தும் அனைத்துச்

சித்தரடியான்களும், சித்தரடியாள்களும், சித்தரடியார்களும், சித்தர்நெறி ஆர்வலர்களும், ஆதரவாளர்களும், மத விருப்பாளர்களும் செயல்படல் வேண்டும்! செயல்படல் வேண்டும்! செயல்படல் வேண்டும்!

**அனைவரின் ஒப்புதலும் பெற்ற குருவாணை.**

**ஞாலகுரு சித்தர் கருவூரர்.**

6) **'உலக ஆன்மநேய ஒருமைப்பாடு'** உருவாக்குவதே பதினெண்சித்தர்கள் வழங்கிய இந்து மதத்தின் கொள்கையும், குறிக்கோளும், செயல்திட்டமுமாகும். அதாவது, இயற்கையாகப் பிறந்த மொழிகளும், மொழிவழி இனங்களும், நாடுகளும் அடுத்தவரை அடிமைப்படுத்தாமலும்; அடுத்தவருக்கு அடிமையாகாமலும் என்றென்றும் தனித்தன்மைகளோடும், தன்னாட்சியுரிமையோடும், விடுதலையோடும் வாழ்ந்திடுதலே பதினெண்சித்தர்களின் சமய, சமுதாய, அரசியல், கலை, இலக்கிய, தொழில் ... முதலியவை பற்றிய கொள்கையாகும்.

அதாவது, இந்து மதம் கூறுவதன்படி; **எல்லா மொழிகளும், மொழி சார்ந்த இனங்களும், நாடுகளும் தன்னுரிமை பெற்று விடுதலை மிக்க தன்னாட்சி பெற்றே திகழ வேண்டும்**. ஆனால், அனைத்தும் ஒன்றோடொன்று போட்டியோ, பொறாமையோ, போரோ இல்லாமல் ஒற்றுமையுடன் ஒருங்கிணைந்து சமாதானமாக வாழ்ந்திடல் வேண்டும். யாரும் யாரையும் சுரண்டவோ! அடிமைப்படுத்தவோ! முற்படவே கூடாது. இத்தகைய பெருமைமிகு உரிமைநிறை மொழிவழித் தன்னாட்சி அரசுகளால்தான் அந்தந்த இனப் பண்பாட்டையும், நாகரீகத்தையும் காத்துப் பேணிப் போற்றி வளர்க்க முடியும்.

இப்படிப் பல பண்பாடுகளும், நாகரீகங்களும் பூத்துக் குலுங்கியும், காய்த்துக் கனிந்து நிறைந்தும் காட்சிதரும் கனிமலர்ச் சோலையாக உலகம் மாறுவதற்குத்தான் உலக ஆன்மநேய ஒருமைப்பாடு

உருவாக்கிடப் பதினெண்சித்தர்கள் இந்து மதத்தை இம்மண்ணுலக மணிசர்களுக்கு (மண் + ஈசர் => மணிசர் = மண்ணில் உயர்ந்த உயிரினம்) வழங்கினர். **<u>இந்து மதத்தால் விலங்குகளோடு விலங்குகளாக வாழ்ந்த மணிசர்கள் மனிதர்களாக</u>** (மனதை உடையவர்கள் = மனப் பண்பாட்டைப் பெற்ற மனிதர்கள்) **<u>மாறினர். இதுவே இந்து மதத்தின் சாதனை.</u>**

இதனையே இன்றைய இ.ம.இ., அ.வி.தி., அ.ஆ.க., உ.அ.தி.ச., க.வ.க., உ.ம.ஆ.கு., ... முதலியவை பொறுப்போடும், பொறுமையோடும் உலகுக்கு அநுபவப்பூர்வமாக விளக்கும் பணியில் ஈடுபடல் வேண்டும். எனவே, அனுவசியமாக சாதிகளின் பெயராலும், மதங்களின் பெயராலும், அரசியல் இயக்கங்களின் பெயராலும் இன்றைய மக்கள் பிரிந்தும், கூறுபட்டும், மாறுபட்டும், வேறுபட்டும், முரண்பட்டும், பகை கொண்டும் போட்டியிட்டுப் போரிட்டு நலிவதையும், இழிவதையும், அழிவதையும் ... நம்மவர்கள் முழுமூச்சாகத் தடுத்திடும் பணியில் ஈடுபடல் வேண்டும்! ஈடுபடல் வேண்டும்! ஈடுபடல் வேண்டும்!

**அனைவரின் ஒப்புதலும் பெற்ற குருவாணை.**
**ஞாலகுரு சித்தர் கருவூரார்.**

7) இந்த 1984ஆம் ஆண்டு சூன் மாதம் [June] கொண்டாடும் ஞானம் வழங்கு பருவபூசையின் பால்குட விழா அழைப்புச் செய்தி மலராக மேற்கண்ட ஆறு குருவாணைகளையும் அச்சிட்டு வெளியிடவும். நமக்கு அனைத்து மதங்களும், சமய சமுதாய அரசியல் கலை இலக்கிய ... இயக்கங்களும் ஏற்புடையவையே. யாரிடமும் வெறுப்போ, மறுப்போ, எதிர்ப்போ, பகையோ, போட்டியோ, பொருமையோ, போரோ, ... நமக்கு இல்லை! இல்லை! இல்லை! இல்லவே இல்லை! எனவே, அனைத்து மதத்தவர்களையும், இயக்கங்களைச்

சேர்ந்தவர்களையும் 'உலக ஆன்மநேய ஒருமைப்பாட்டை' உருவாக்கவும்; 'உலகச் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம்' அமைக்கவும் பாடுபட நம்மோடு துணை வர அழைக்கும் விழாவாக இந்த ஞானம் வழங்கு பருவபூசையும், பால்குட விழாவும் அமையட்டும்! அமையட்டும்! அமையட்டும்!

8) இந்த மண்ணுலகில் மனித இனம் வாழப் போகிற காலம் நாற்பத்து மூன்று இலட்சம் ஆண்டுகள்தான். [கிரேதாயுகம் = 17,28,080 + திரேதாயுகம் = 12,90,000 + துவாபர யுகம் = 8,64,000 + கலியுகம் = 4,32,000 = 43,14,080]. இந்த மனிதர்களைக் காக்க பதினெண்சித்தர் பீடாதிபதிகள் நாற்பத்தெட்டுப் பேர்கள் மட்டுமே தோன்றுவர். இவர்களின் கீழ் நாற்பத்தெட்டு வகையான சித்தர்கள் கோடிக்கணக்கில் தோன்றி மணிசர்களைப் பண்படுத்தி மனிதர்களாக்கிக் கொண்டே இருப்பார்கள். ஒவ்வொரு பதினெண்சித்தர் பீடாதிபதியும் உலக மக்களை நன்னெறிப்படுத்தும் மூல மதமான இந்து மதம் நலிவும், மெலிவும், செயலொடுக்கமும் அடைகின்ற காலக்கட்டத்தில் தோன்றுவர். கலியுகத்துக்கு மட்டும் முப்பத்தொன்பது பதினெண்சித்தர் பீடாதிபதிகள் தோன்றித்தான் இந்து மதத்தின் மூலம் மானுடரைக் காக்க வேண்டியிருக்கும். அதாவது, மானுட இனம் தனது கடைசிக் காலக்கட்டத்தில்தான் மிகுந்த வெறிநிலைகள், பேய்நிலைகள், .....

***[இதன் தொடர்ச்சி கிடைக்கவில்லை.]***

***[நகலில் இந்தப் பக்கத்தின் ஆரம்பம் கிடைக்கவில்லை.]***

"..... ..... ..... - 'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' என்ற நவநாத சித்தர்நெறிப்படி சிந்தித்தவர்தான் காரல் மார்க்சு. அவருக்கு இப்பேருண்மை தெரிந்திருந்தால் அவரே தம்மை

நவநாத சித்தர் என்று அறிவித்திருப்பார். இன்றைய நிலையில் இந்து மத மறுமலர்ச்சிப் பணிகள் காரல் மார்க்சின் சித்தாந்தமும், நவநாத சித்தர்களின் தத்துவமும் ஒன்றுதான் என்பதைப் புரிந்து செயல்பட்டால்தான் வெற்றி பெறும். மேலும், காரல் மார்க்சு 'மதம் ஒரு போதைப் பொருள்' என்றுதான் கூறினாரே தவிர; மதம் ஒரு கொடிய நஞ்சு என்று கூறி மறுக்கவில்லை, வெறுக்கவில்லை என்ற பேருண்மையை மத வாதிகள்தான் இந்திய மார்க்சிய வாதிகளுக்கு விளக்க வேண்டும்.

ஏனெனில், காரல் மார்க்சைக் கடவுள் வெறுப்பாளராக, மத மறுப்பாளராக, வறட்டு நாத்திகராக..... இந்திய மக்களுக்குத் தவறான விளம்பரம் வழங்கியதால்தான் இன்றுவரை உண்மையான மார்க்சியம் வளர முடியவில்லை. மேலும், இந்து மதத்தில் இல்லாத பொதுவுடமையையோ, சமத்துவத்தையோ, சுரண்டல் ஒழிப்பையோ ... காரல் மார்க்சு கூறிவிடவில்லை. எனவே, காரல் மார்க்சு இந்து மதப் பெரியார்களுள் ஒருவராக ஏற்று வழிபட்டிட்டால்தான் இந்து மதம் மறுமலர்ச்சி பெறமுடியும் என்பதை இந்துக்கள் உணர வேண்டும். இந்து மதம் மறுமலர்ச்சி பெற்றால்தான் தமிழ்மொழி செழித்துத் தமிழினம் தன்மானப் பிடிப்பும், நாட்டுப் பற்றும், இன உணர்வும் வளரப் பெற்றுத் தன்னாட்சி பெறும்.

எனவே, யாம் இ.ம.இ.யின் மூலம் காரல் மார்க்சை நவநாத சித்தராக அறிவிக்கிறோம். இதனை யாரும் தவறாக எண்ண வேண்டாம். அரசியல் எழுச்சியைத் தடை செய்யும் மதத்தின் மடமைகளை மட்டுமே காரல் மார்க்சு மறுத்தார், வெறுத்தார் என்பதால்; அவரை ஒரு மாபெரும் மதச் சீர்திருத்தவாதியாக ஏற்றுப் போற்றுவதில் தவறு ஏதுமில்லை.

இந்து மதத்தின் மடமைகளை அகற்றக் காரல் மார்க்சை வழிபாட்டுக்குரிய ஒரு பெரியவராக ஏற்பதுதான் சிறந்தது. இது, காரல் மார்க்சை எந்த வகையிலும் தவருகப் புரிந்து கொண்டதாகவோ, பயன்படுத்துவதாகவோ ஆகாது. எமக்கு இந்திய மண்ணில் மார்க்சிய வித்துக்களைப் பயிராக்குவதில் ஏற்பட்ட தோல்வியால்தான் ‘மார்க்சீய மரணம்’ என்ற நூல் பிறந்தது. இருந்தபோதும், இந்து மதம் என்ற நாற்றங்காலிலாவது மார்க்சிய விதைகளை முளைக்க வைத்து நாற்றுத் தயாரிக்க விரும்பும் எமது முயற்சியாகவே காரல் மார்க்சை நவநாத சித்தராக அறிவிக்கிருேம். இதுபற்றி இறுதி முடிவு செய்யும் உரிமை அடுத்து வரும் இ.ம.இ.யின் தலைவரான பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் அரசயோகி ஞாலகுரு சித்தர் கருவூருரிடம் ஒப்படைக்கிருேம் யாம்.

இதேபோல், இன்றைக்குத் தள்ளாத வயதிலும் தமிழினத்தின் தன்மானம் காக்கவும், தமிழ்மொழியின் உரிமையைக் காக்கவும், தமிழ் நாட்டுப் பற்றுணர்வை விழிச்சி பெற்று எழுச்சி பெறச் செய்யவும்; தமிழ்ச் சமுதாயம் சாதிமதப் பிரிவுகளால் பிளவுண்டு ஒற்றுமையற்று இருப்பதை மாற்றித் தமிழின ஒருமைப்பாட்டை உருவாக்கவும் தன்னலமின்றித் தொண்டாற்றும் பெரியார் ஈ.வெ.ரா. அவர்களை அறுபத்து நான்காவது நாயனுராக அறிவிப்புச் செய்யும் திட்டத்தையும் அறிவிக்கிருேம் யாம்.

கோயில் கூடாது என்ருே! பூசைகளும் பூசாறிகளும் வேண்டாமென்ருே! ... கூருமல் பார்ப்பனர்களின் சுரண்டலும், சமசுக்கிருத மொழியின் ஆதிக்கமும் ஒழிந்தால்தான் இந்து மதம் மக்களுக்குப் பயன்படும் என்ற மாபெரும் தத்துவத்தை மையமாகக் கொண்டு துணிவோடும், கனிவோடும் கடுமையான

மதச் சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டிருக்கும் தமிழினத் தலைவர் தன்மான இயக்கத் தந்தை பெரியார் ஈ.வெ.ரா. அவர்களை இந்து மதம் காத்திட உழைக்கும் அறுபத்து நான்காவது நாயன்மாராக அறிவிக்கிறோம் யாம். இதனை, அவரே கூட மறுக்கலாம். ஆனால், இந்த அறிவிப்புத்தான் அவரது கனவுகளை நனவாக்கும்; கொள்கைகளை வெற்றி பெறச் செய்யும்; குறிக்கோள்களை என்றென்றும் நிலைத்த செயல்வடிவில் வாழச் செய்யும். பெரியார் வேறு, தமிழின மறுவாழ்வு வேறு!, தமிழ்நாட்டு விடுதலை வேறு! தமிழ்மொழியின் ஆட்சி மீட்சி வேறு! ... என்று பிரித்து உணர முடியாது! முடியாது!! முடியாது!!! முடியவே முடியாது!!!!

ஒவ்வொரு தமிழனும் அன்றாடம் பெரியார் ஈ.வெ.ராவை ஒருமுறையாவது நினைத்து வழிபட்டால்தான் ‘பெரியாரிசம்’ எனப்படும் பெரியார் நெறி செழித்தோங்கி வெற்றி நிலையைப் பெற முடியும். எனவே, பெரியாரே எதிர்த்தாலும் மறுத்தாலும் அவரை அறுபத்து நான்காவது நாயன்மாராக அறிவித்துப் போற்றி வழிபட்டு அவரது தத்துவங்களை வழித்துணையாகப் பெற வேண்டியது இ.ம.இ.யின் கடமையாகும். இது பற்றிய முடிவையும் அடுத்து வரும் இ.ம.இ. தலைவரிடம் விட்டு விடுகிறோம் யாம். ...

மேலும், மார்க்சியம் தோன்றி ஒரு நூற்றாண்டுக்குள் விரைந்தும் விரிந்தும் உலக முழுதும் மக்களால் உண்மையானது நன்மையானது என எப்படி ஏற்றுக் கொள்ளப்பட்டதோ; அதைவிடச் சிறந்த கொள்கைகளையும், தத்துவங்களையும், செயல்முறைகளையும், வடிவமைப்புக்களையும் ... கொண்டிட்ட பதினெண்சித்தர்கள் படைத்த முதல் மூல மதமான உண்மையான இந்து மதத்தை இ.ம.இ. மூலம் மக்களுக்கு அறிமுகப்

படுத்திட்டால்; அது மின்னல் வேகத்தைப் போன்று உலகம் முழுதும் பரவி அனைத்துலக ஏக்கங்கள், தேக்கங்கள், வீக்கங்கள், அடக்கங்கள், முடக்கங்கள், நலிவுகள், மெலிவுகள், பற்றுக்குறைகள், அநீதிகள், சுரண்டல்கள் ... முதலியனவற்றை முழுமையாக மாற்றி '**சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம்**' அமைத்துச் செயல்பட்டிடும் என்ற கருத்தையும் இங்கு கூறிக் கொள்கிறேன்."

***சித்தர் காகபுசுண்டர் ம.பழனிச்சாமி,***
***காக்காவழியன் பண்ணையாடி,***
***இரண்டாவது இ.ம.இ. தலைவர்.***

என்று இப்படி எம் தந்தை மிகத் தெளிவாக காரல் மார்க்சு பற்றியும், பெரியார் ஈ.வெ.ரா. பற்றியும் கூறியவையே நமது அருளுரை, அறிவுரை, அருளார்ந்த அறிவுரை, அறிவார்ந்த அருளுரை என அறிவிக்கிறோம் யாம்.

9) நாம் நாயன்மார்கள், ஆழ்வார்கள், சங்கரர்கள், புத்தர்கள், மகாவீரர்கள், தேவகுமாரர்கள், நபிகள், ஆச்சாரியார்கள், காரல் மார்க்சு, காந்தி, பெரியார் ... முதலியோரனைவரின் தத்துவங்களையும் புதிய சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம் அமைக்கப் பயன்படுத்திக் கொள்வோம். நாம், அனைவரையும் மதிப்போம்! போற்றுவோம்! அனைவரிடத்தும் அன்பு செலுத்தும் சமாதான வாழ்வு முறையே சித்தர் நெறி! நமது இந்து மதம் அன்பு வழி! அற வழி! அமைதி வழி! மென்மை வழி! உண்மை வழி! நன்மை வழி! ... என்று கூறுவனவற்றையே நாம் சித்தர்களின் இந்து மறுமலர்ச்சி இயக்கமாக! அருட்பணி விரிவாக்கத் திட்டமாக! அருளுலக ஆர்வலர் கழகமாக! உலக அருளாளர் திருச்சபையாக! கடவுளை வழிபடுவோர் கழகமாக! உலகமத ஆய்வுக்

குழுவாக! அருட்கலை வளர்க்கும் மன்றமாக! எண்ணற்ற வடிவமைப்புக்களைப் பெறுமாறு செய்துள்ளோம். இவற்றை உலக மக்கள் தெரிந்து, புரிந்து, உணர்ந்து, விரும்பிச் செயல்படுமாறு செய்வதே நமது அனைத்து விழாக்களின் நோக்கமாகவும் செயல்திட்டமாகவும் இருக்கட்டும்.

**அனைவரின் ஒப்புதலும் பெற்ற குருவாணை.**
**ஞாலகுரு சித்தர் கருவூரார்.**
**7/4/84.**

ஓம் திருச்சிற்றம்பலம்.

**இந்து மதத் தந்தை,**
**குருமகாசன்னிதானம்,**
**ஞாலகுரு சித்தர் கருவூரார்,**
**பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி,**
**தலைவர், குருதேவர், ஞானத் தந்தை.**

இந்து மறுமலர்ச்சி இயக்கம்,
அருட்பணி விரிவாக்கத் திட்டம்,
அருளுலக ஆர்வலர் கழகம்.
7/4/84.

நகல் எடுத்தவர்: அன்பு/ சித்தர் மகன், சித்தரடியார் தெய்வீகாச்சாரியார், சோ.இரவீந்திரன் 22/4/1984.

**//உண்மை நகல்//**

**//இதன் மூலம்: சித்தரடியார் சோ.இரவீந்திரன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

*இந்தக் கட்டுரைக்குக் கிடைத்த நகலில் இடையில் சில பத்திகள் இல்லை. இதன் முழுமையான நகல் வைத்திருப்பவர்கள் நகலை வழங்கினால் ஏற்றுக் கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறோம்.*

# இந்து மறுமலர்ச்சி இயக்கம்

**தோற்றம்: கி.பி.1772 (பண்பாட்டுக் கழகம்) பதிவு எண்: 135/83**

# அருட்பணி விரிவாக்கத் திட்ட உறுதிமொழி

1. பதினெண்சித்தர்களின் வாழ்வியல் நெறியான “சித்தர் நெறி”யே இந்துமதம். இதில் கலந்து விட்ட மூட நம்பிக்கைகள், மடமைகள், கற்பனைகள், .... முதலியவற்றை பயிற்சிகள் தருவதன் மூலம் அகற்றுவதே நோக்கம்.

2. உலக மதங்களுக்கு சித்தர் நெறியே தாய்! எனவே, அவரவர் தத்தம் மத வழி வழிபட்டு அனுபவப் பூர்வமான வழிபாட்டு முறைகளைக் கற்றுத் தருதலே நோக்கம்.

3. அமைதியுடன், அன்புடன், நிறைவுடன், நிம்மதியுடன் இல்லறம் இனிது அமைய உதவும் ஆன்மீக உணர்வுகளை சித்தர் நெறி மூலம் வளர்க்கப் படுவதே நோக்கம்.

4. ‘சமத்துவ சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம்’ மற்றும் ‘உலக ஆன்மநேய ஒருமைப்பாடு’ முதலியவற்றை உருவாக்குவதே நோக்கம்.

5. சித்தர்களின் ஒகாசன, யோகாசன பயிற்சி மூலம் உடல், உயிர், ஆவி, ஆன்மா முதலியவைகளை வளமாக்குதலும், வலிமையாக்குதலும் நோக்கமாகும்.

6. மருத்துவ உலகில் தெரியாமை, புரியாமை, அறியாமை, புதிர், .... முதலியவை இருப்பதை முற்றிலும் மாற்றிடச் சித்தர்களின் மருத்துவக் கொள்கைகளை அனைவருக்கும் வழங்குதலே நோக்கம்.

7. மனித சமுதாய வேற்றுமைகள், ஏற்றத் தாழ்வுகள், மாறுபாடுகள், முரண்பாடுகள், குறைபாடுகள், பற்றுக் குறைகள், இயலாமைகள், வறுமைகள், தேக்கங்கள், வீக்கங்கள், முடக்கங்கள், ..... முதலிய அனைத்தையும் முற்றிலும் அகற்றிடச் சித்தர்களின் செய்திச் செழுமையிலும், கண்ணோட்டத்திலும் உலக வரலாறு, இலக்கியம், கலை, தொழில் முதலிய அனைத்துத் துறைகளையும் புதுப்பித்து எழுதுதலே நோக்கம்.

8. மானுட நலப் பாதிப்புகள், ஊழ்வினை, சூழ்வினை, ஆள்வினை, பாரம்பரியம், நாள், கோள், மீன், இராசி, காற்று, கருப்பு, பேய், பிசாசு, ஆவி, கண்ணேறு, .... முதலியவைகளின் ஆட்சியால் விளைகின்றன என்ற பேருண்மையை அடிப்படையாகக் கொண்டு அனைவருக்கும் நலம் விளைவிக்க அருட்பணி விரிவாக்கத் திட்ட யாகசாலைகள் மூலம் முயலுதலே நோக்கம்.

9. மதம், மொழி, இனம், சாதி, வட்டாரம், கட்சி முதலியவைகளின் பெயரால் திகழுகின்ற சர்வாதிகாரங்களையும், சுரண்டல்களையும், ஏமாற்றுக்களையும், அடிமைநிலைகளையும், .... முழுமையாக அகற்றுதலே நோக்கம்.

10. நாத்திகத்தாலும், மதமறுப்பாலும், வெறுப்பாலும், பண்பாட்டுத் துரோகத்தாலும், இன விரோதத்தாலும், தாய்மொழிப் பற்றின்மையாலும், நாட்டுப் பற்றின்மையாலும் ஏற்பட்டுவிட்ட இகழ்ச்சிகளை, தாழ்ச்சிகளை, வீழ்ச்சிகளை, இழப்புகளை ஈடு செய்வதே நோக்கம்.

**//உண்மை நகல்//**

**//மூலம்: அச்சிட்ட அறிவிக்கை.//**

# இந்து மறுமலர்ச்சி இயக்கம்

# அருட்பணி விரிவாக்கத் திட்டம்

**"குருவாசகமும் திருவாசகமும் மனிதனின் கண்கள்."**

**"மதமே மானுடப் பண்பாட்டுக்கும் நாகரீகத்துக்கும் பிறப்பகம், காப்பகம், கருவூலம்."**

**"மத வழிப்பட்ட உணர்வும் செயலுமே உலகியலில் தெளிவும், தெம்பும், நிறைவும் உண்மையாகப் பெறச் செய்யும்."**

**"ஆவி, ஆன்மா, உயிர் எனும் மூன்றின் முழுமையான செயல் விளக்கமே சித்தர் நெறி."**

**"விழாக்களும் சடங்குகளும், சாத்திரச் சம்பிறதாயங்களுமே மானுட வாழ்வின் பொருள் விளக்கும் வழிகள்."**

**"தெரியாதவை தெரியவும், புரியாதவை புரியவும் விழா வழி விளக்கத்தை உணருங்கள்."**

**-ஞாலகுரு சித்தர் கருவூரூர்.**

//உண்மை நகல்//

//அருள்மிகு வீரமாகாளி சன்னிதான பால்குடப் பெருவிழா அழைப்பிதழ் அறிவிக்கையில் இருந்திட்ட வாசகங்கள்.//

**"அருளுலகில் சமசுக்கிருதத்தைப் பயன்படுத்துவது பெரிய பாவம், கொடிய தீட்டு, நெடிய சாபம்"** -- குருபாரம்பரிய வாசகம்.



"... இம்மண்ணுலக அருளாளர் வரிசையிலேயே முதன்முதல் அரசயோகத்தைத் துவக்கி மிகப்பெரிய வெற்றி நிலைக்குரிய சாதனை நிலையைத் தோற்றுவித்தவரும்; கருவறைக் கோபுரமுடைய **தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டியவருமான பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்களே** போர்க்கோலம் பூண்டு, படை நடத்தி, வேலோச்சியும், வாள் வீசியும், அத்திறங்கள் எய்தும், குருதியாறு ஓடவிட்டும்தான் 'இந்து மறுமலர்ச்சி இயக்கம்' வெற்றி பெறுமாறு செய்தார். ... ..."

இவருக்கு அடுத்து 900 ஆண்டுகள் கழித்துப் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் **ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்** அவர்களின் <u>குருவாணைப் படி</u> இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப் படுகின்றன. இவை **ஞாலகுரு** அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் தாள் நைந்து, எழுத்து மங்கி, அழிந்து கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாகவே வழங்கப் படுகின்றன.



**அம்மையப்பர்**

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the **Anaathi Sankaraachaariyaar Peedam** Trust, (Regd) East Tambaram, Chennai.
Printed by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram. Cell: 09972130609. at Sri Vignesh Printers, Madurai.

**www.newsletters.gurudevar.org** **www.gurudevar.org**
**www.induism.org** ***Email:*** **indhuism@gmail.com**

www.books.gurudevar.org